www.Padasalai.Net www.TrbTnpsc.com

HSL

# அரையாண்டுத் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## கணிதம்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

I பகுதி - I அனைத்து வினாக்களுக்கும் விடையளி. $14 \times 1 = 14$

1. $R = \{(x, x^2) / x$ ஆனது 13ஐ விடக் குறைவான பகா எண்கள்$\}$ என்ற உறவின் வீச்சகமானது
அ) $\{2, 3, 5, 7\}$ ஆ) $\{2,3,5,7,11\}$ இ) $\{4,9,25,49,121\}$ ஈ) $\{1,4,9,25,49,121\}$

2. $f(x) = \sqrt{1+x^2}$ எனில் அ) $f(xy) = f(x) . f(y)$ ஆ) $f(xy) \geq f(x).f(y)$
இ) $f(xy) \leq f(x) . f(y)$ ஈ) இவற்றில் ஒன்றுமில்லை

3. ஒரு கூட்டுத் தொடர் வரிசையின் 6-வது உறுப்பின் 6 மடங்கும் 7வது உறுப்பின் 7 மடங்கும் சமம் எனில், அக்கூட்டுத் தொடர் வரிசையின் 13 வது உறுப்பு அ) 0 ஆ) 6 இ) 7 ஈ) 13

4. $r = 1$ எனும் போது பெருக்குத் தொடர் வரிசையின் முதல் n உறுப்புகளின் கூடுதல்
அ) $a^n$ ஆ) n இ) na ஈ) a

5. $x^4 + 64$ முழு வர்க்கமாக மாற்ற அதனுடன் பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும்?
அ) $4x^2$ ஆ) $16x^2$ இ) $8x^2$ ஈ) $-8x^2$

6. $4m^2 - 24m + 36 = 0$ இன் வர்க்க மூலம் அ) $4(m-3)$ ஆ) $2(m-3)$ இ) $(2m - 3)^2$ ஈ) $4(m+3)$

7. $\Delta ABC$ - யில் AD ஆனது $\angle BAC$ - யின் இருசமவெட்டி, AB = 8செ.மீ, BD = 6செ.மீ. மற்றும் DC = 3செ.மீ. எனில் பக்கம் AC - யின் நீளம் அ) 6செ.மீ. ஆ) 4 செ.மீ. இ) 3 செ.மீ ஈ) 8 செ.மீ.

8. $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்க்கோடுகள் சந்திக்கும் புள்ளி
அ) (5, 3) ஆ) (2, 4) இ) (3, 5) ஈ) (4, 4)

9. PQ என்ற நேர்க்கோடானது X அச்சை A-யிலும் Y அச்சை B-யிலும் சந்திக்கிறது. AB - யின் நடுப்புள்ளி (a,b) எனில் A மற்றும் B யின் ஆயத்தொலைவுகள் முறையே
அ) (a, 0), (0, b) ஆ) (2a, 0), (0, 2b) இ) (0, b), (a, 0) ஈ) (0, 2b), (2a, 0)

10. $\sin\theta + \cos\theta = a$ மற்றும் $\sec\theta + \text{cosec}\,\theta = b$ எனில் $b(a^2-1)$ மதிப்பு
அ) 2a ஆ) 3a இ) 0 ஈ) 2ab

11. r அலகுகள் ஆரம் உடைய இரு சம அரைக்கோளங்களின் அடிப்பகுதிகள் இணைக்கப்படும் போது உருவாகும் திண்மத்தின் புறப்பரப்பு
அ) $4\pi r^2$ ச.அ. ஆ) $6\pi r^2$ ச.அ. இ) $3\pi r^2$ ச.அ ஈ) $8\pi r^2$ ச.அ

12. 15செ.மீ உயரமும் 16 செ.மீ. விட்டமும் உடைய ஒரு நேர்வட்ட கூம்பின் வளைபரப்பு
அ) $60\pi$ ச.செமீ. ஆ) $66\pi$ ச.செ.மீ. இ) $120\pi$ ச.செ.மீ. ஈ) $136\pi$ ச.செ.மீ.

13. 8, 8, 8, 8, 8, ......... 8 ஆகிய தரவின் வீச்சு அ) 0 ஆ) 1 இ) 8 ஈ) 3

14. ஒரு புத்தகத்திலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பக்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த பக்க எண்ணின் ஒன்றாம் இடமதிப்பானது 7-ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவானது
அ) $\frac{3}{10}$ ஆ) $\frac{7}{10}$ இ) $\frac{3}{9}$ ஈ) $\frac{7}{9}$

II பகுதி - II எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண். 28ற்கு கட்டாயம் விடையளிக்கவும். $10 \times 2 = 20$

15. $B \times A = \{(-2, 3), (-2, 4), (0, 3), (0, 4), (3,3), (3,4)\}$ எனில் A மற்றும் B ஆகியவற்றைக் காண்க.
16. $fof(k) = 5$, $f(k) = 2k-1$ எனில் k - யின் மதிப்பைக் காண்க.
17. 3,6,9,12,.......... 111 என்ற கூட்டுத்தொடர் வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க.
18. $1^3+2^3+3^3+........+k^3 = 44100$ எனில் $1 + 2 + 3 + ........ + k$ யின் மதிப்பு காண்க.
19. $\frac{x^2+6x+8}{x^2+x-2}$ என்ற கோவையின் விலக்கப்பட்ட மதிப்பு காண்க.
20. சுவரின் அடியிலிருந்து 4 அடி தொலைவில் உள்ள ஏணியானது சுவரின் உச்சியை 7 அடி உயரத்தில் தொடுமெனில் தேவையான ஏணியின் நீளத்தைக் காண்க. விடையை ஒரு தசம இடத்திருத்தமாக தருக.
21. (3, -1), (a, 3) மற்றும் (1, - 3) ஆகிய மூன்று புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனில் a யின் மதிப்பு காண்க.
22. (2,3) மற்றும் (-7, -1) என்ற இரு புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.
23. $\frac{\sec\theta}{\sin\theta} - \frac{\sin\theta}{\cos\theta} = \cot\theta$ என்பதை நிரூபிக்கவும்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

24. ஒரு நேர் வட்டக் கூம்பின் கன அளவு 11088 க.செ.மீ. ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ. எனில், அதன் ஆரம் காண்க.

25. ஆரம் r அலகுகள் கொண்ட ஒரு கோளம் ஒரு நேர்வட்ட உருளையினுள் மிகச் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது எனில், கீழ்க்கண்டவற்றைக் கணக்கிடுக. 1) கோளத்தின் புறப்பரப்பு 2) உருளையின் வளைபரப்பு

26. முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கத்தைக் காண்க.

27. ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

28. $(5 \;\; x \;\; 1)\begin{pmatrix} 2 \\ -1 \\ 3 \end{pmatrix} = (20)$ எனில் ன் X மதிப்பு காண்க.

**III எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண். 42-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 10 X 5 = 50

29. $A = \{x \in w / x < 2\}$, $B = \{x \in N / 1 < x \leq 4\}$ மற்றும் $C = \{3,5\}$ எனில் $AX(B \cap C) = (AXB) \cap (AXC)$ என்பதைச் சரிபார்.

30. $f(x) = x-1$, $g(x) = 3x + 1$ மற்றும் $h(x) = x^2$ எனில் $(fog)\ oh = fo(goh)$ எனக்காட்டுக.

31. ஒரு பெருக்குத் தொடர் வரிசையின் அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் பெருக்கற்பலன் 343 மற்றும் அவற்றின் கூடுதல் $\frac{91}{3}$ எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.

32. ரேகாவிடம் 10செ.மீ. 11 செ.மீ 12 செ.மீ. ........ 24 செ.மீ. என்ற பக்க அளவுள்ள 15 சதுர வடிவ வண்ணக் காகிதங்கள் உள்ளன. இந்த வண்ணக் காகிதங்களைக் கொண்டு எவ்வளவு பரப்பை அடைத்து அலங்கரிக்க முடியும்?

33. $ax^4 + bx^3 + 361x^2 + 220x + 100$ ஆனது ஒரு முழுவர்க்கம் எனில் a மற்றும் b யின் மதிப்பு காண்க.

34. $2x^2 - x - 1 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில் கீழே கொடுக்கப்பட்ட மூலங்களையுடைய இருபடிச் சமன்பாட்டைக் காண்க. i) $\frac{1}{\alpha}, \frac{1}{\beta}$ ii) $2\alpha + \beta,\ 2\beta + \alpha$

35. $A = \begin{pmatrix} 1 & 2 & 1 \\ 2 & -1 & 1 \end{pmatrix}$ மற்றும் $B = \begin{pmatrix} 2 & -1 \\ -1 & 4 \\ 0 & 2 \end{pmatrix}$ எனில் $(AB)^T = B^T A^T$ என்பதைச் சரிபார்க்க.

36. கோண இருசமவெட்டி தேற்றத்தை எழுதி நிரூபிக்கவும்.

37. (-9, 0), (-8, 6), (-1, -2) மற்றும் (-6, -3) ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

38. $4x + 5y = 13$, $x - 8y + 9 = 0$ ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளி வழியாகவும், y அச்சுக்கு இணையாகவும் உள்ள நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

39. ஒருவர் கோபுரத்திலிருந்து விலகி கடலில் சென்று கொண்டிருக்கும் படகு ஒன்றை, கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்க்கிறார். கோபுரத்தின் அடியிலிருந்து 200 மீ தொலைவில் படகு இருக்கும் போது, படகை அவர் $60^0$ இறக்கக் கோணத்தில் காண்கிறார். 10 வினாடிகள் கழித்து இறக்கக் கோணம் $45^0$ ஆக மாறுகிறது எனில், படகு செல்லும் வேகத்தினைத் (கி.மீ. / மணியில்) தோராயமாகக் கணக்கிடுக. மேலும் படகு நிலையான தண்ணீரில் செல்கிறது எனக் கருதுக. ($\sqrt{3} = 1.732$)

40. ஆரம் 10 மீட்டரும் உயரம் 15 மீட்டரும் உடைய ஒரு கூம்பு வடிவக் கொள்கலன் முழுமையாகப் பெட்ரோலால் நிரம்பியுள்ளது. நிமிடத்திற்கு 25 கனமீட்டர் பெட்ரோல் கொள்கலனின் அடிப்புறம் வழியாக வெளியேற்றப்பட்டால் எத்தனை நிமிடங்களில் கொள்கலன் காலியாகும். விடையை நிமிடத் திருத்தமாகத் தருக.

41. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. இரண்டு முக மதிப்புகளும் சமமாக இருக்க அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 4 ஆக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

42. ஒரு சதுரங்கப் பலகையில் 64 சம சதுரங்கள் உள்ளன. ஒவ்வொரு சதுரத்தின் பரப்பு 6.25 ச.செ.மீ. சதுரங்கப் பலகையில் நான்குப் பக்கங்களிலும் வெளிப்புற சதுரங்களை ஒட்டி 2 செ.மீ. அகலத்தில் பட்டையான ஓரம் உள்ளது எனில், சதுரங்கப் பலகையின் பக்கத்தின் நீளத்தைக் காண்க.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 2 X 8 = 16

43. அடிப்பக்கம் BC = 5.6cm, $\angle A = 40^0$ மற்றும் $\angle A$- யின் இருசமவெட்டியானது அடிப்பக்கம் BC ஐ CD = 4cm என D- யில் சந்திக்குமாறு அமையும் முக்கோணம் ABC வரைக. ***(அல்லது)*** ஆ) O - வை மையமாகக் கொண்ட 3.6செ.மீ. ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மையத்திலிருந்து 7.2 செ.மீ. தொலைவிலுள்ள P என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைக.

44. அ) $y = \frac{1}{2} x$ என்ற நேரிய சமன்பாட்டின் / சார்பின் வரைபடம் வரைக. விகிதசம மாறிலியை அடையாளம் கண்டு, அதனை வரைபடத்துடன் சரிபார்க்க. மேலும் i) x= 9 எனில் y ஐக் காண்க.
ii) y = 7.5 எனில் x ஐக் காண்க. ***(அல்லது)*** ஆ) $y = x^2 + 3x + 2$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 2x + 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com